வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்-நாராயணசாமி

தேதி 28.12.2024 நேரம் மாலை 6.10 மணி

---------------------------------------------------

<u>தலைப்புச் செய்திகள்</u>

***<u>மன்மோகன் சிங்</u>*** <u>1 (17)</u>

முன்னாள் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங்கின் உடல் இன்று முழு அரசு மரியாதையுடன் புதுடெல்லியில் உள்ள நிகாம் போத் காட் மைதானத்தில் தகனம் செய்யப்பட்டது. இதில் சீக்கிய குருமார்களும், மன்மோகன் சிங்கின் குடும்பத்தாரும் பங்கேற்றனர். இறுதி சடங்கிற்கு முன்பு குர்பானி மந்திரங்கள் ஓதப்பட்டன. பின்னர் சம்பிரதாய மரபுபடி குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு, குடியரசு துணை தலைவர் திரு ஜக்திப் தன்கர், பிரதமர் திரு நரேந்திர மோடி மத்திய அமைச்சர்கள் திரு ராஜ்நாத் சிங், திரு அமித் ஷா, திரு ஜே.பி நட்டா, மக்களவை தலைவர் திரு ஓம் பிர்லா ஆகியோர் டாக்டர் மன்மோகன் சிங்கிற்கு இறுதி அஞ்சலி செலுத்தினர். மேலும், காங்கிரஸ் தலைவர் திரு மல்லிகார்ஜீன கார்கே, திருமதி சோனியாகாந்தி, திரு ராகுல்காந்தி உள்ளிட்ட ஏராளமான தலைவர்களும் அஞ்சலி செலுத்தினர். தொடர்ந்து ராணுவ தளபதி ஜெனரல் உபேந்திர திவேதி, கடற்படை தளபதி அட்மிரல் தினேஷ் கே திரிபாதி, விமானப்படை தளபதி ஏர் சீப் மார்ஷல் அமர் ப்ரித் சிங், பூடான் மன்னர் ஜிக்மீர் கேசர் நாம்கேல் வாங்சுக் மற்றும் மொரிஷியஸ் வெளியுறவு அமைச்சர் திரு தனஞ் ராம்ஃபுல் ஆகியோரும் டாக்டர் மன்மோகன் சிங்கிற்கு இறுதி அஞ்சலி செலுத்தினர்.

*மன்மோகன் சிங்* 2 (15)

டாக்டர் மன்மோகன் சிங் கடந்த 2004 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரை நாட்டின் பிரதமராக திகழ்ந்தார். இந்திய பொருளாதாரத்தின் சிற்பியாக விளங்கினார். 92 வயதான அவர் உடல்நலக்குறைவால் டெல்லியில் உள்ள எயிம்ஸ் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தார். இந்நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் அவர் உயிரிழந்தார். பின்னர் அவரது உடல் டெல்லியில் உள்ள அவரது இல்லத்திற்கு கொண்டு செல்லப்பட்டது. அவரது உடலுக்கு தலைவர்களும், பொதுமக்களும் அஞ்சலி செலுத்தினர். இந்நிலையில், இன்று காலை 8 மணியளவில் பொதுமக்கள் அஞ்சலி செலுத்துவதற்காக அவரது உடல் காங்கிரஸ் கட்சியின் அலுவலகத்திற்கு கொண்டு செல்லப்பட்டது. பின்னர் இன்று காலை 9.30 மணியளவில் மறைந்த முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங்கின் உடல் ராணுவ வாகனத்தில் ஊர்வலமாக கொண்டு செல்லப்பட்டது. இறுதி ஊர்வலத்தில் ஏராளமானோர் பங்கேற்று அஞ்சலி செலுத்தினர். அங்கு பல்வேறு வெளிநாட்டு தலைவர்களும் இறுதி அஞ்சலி செலுத்தினர்.

*நினைவிடம்* 1 (16)

மறைந்த முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங்கிற்கு நினைவிடம் அமைக்க நிலம் ஒதுக்கித் தரப்படும் என மத்திய அரசு அறிவித்துள்ளது. இது தொடர்பாக மத்திய உள்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், மன்மோகன் சிங்கிற்கு நினைவிடம் அமைக்க இடம் ஒதுக்கித் தர வேண்டும் என்று காங்கிரஸ் தலைவர் திரு மல்லிகார்ஜீன கார்கே வேண்டுகோள் விடுத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, மத்திய அமைச்சரவை கூட்டத்திற்கு பிறகு டாக்டர் மன்மோகன் சிங்கிற்கு நினைவிடம் அமைக்க இடம் ஒதுக்கித் தர மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித்ஷா உத்தரவிட்டுள்ளதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக காங்கிரஸ் தலைவர் திரு

மல்லிகார்ஜீன கார்கேவிற்கும், மறைந்த முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங்கின் குடும்பத்தாருக்கும் தகவல் தெரிவிக்கப் பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது.

முன்னாள் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங்கின் மறைவுக்கு மத்திய அமைச்சரவையில் இரங்கல் தெரிவிக்கப்பட்டது. டெல்லியில் பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையில் மத்திய அமைச்சரவை கூட்டம் நேற்று கூடியது. இதில், மன்மோகன் சிங்கின் அளப்பறிய பணிகளுக்கு மரியாதை

<u>நினைவிடம் 2 (17)</u>

செலுத்தும் வகையில் இரங்கல் தெரிவிக்கப்பட்டது. அவரது மறைவை ஒட்டி அரசு சார்பில் 7 நாள் துக்கம் அனுசரிக்கப்படுகிறது. இதனிடையே, நேற்று புதுடெல்லியில் நடைபெற்ற காங்கிரஸ் காரிய கமிட்டி கூட்டத்தில் மன்மோகன் சிங் மறைவுக்கு இரங்கல் தெரிவிக்கப்பட்டது. இக் கூட்டத்தில், கட்சி தலைவர் திரு மல்லிகார்ஜீன கார்கே, திருமதி சோனியாகாந்தி, திரு ராகுல்காந்தி, திருமதி பிரியங்கா காந்தி உள்ளிட்ட முக்கிய தலைவர்கள் பங்கேற்றனர்.

பஞ்சாப் மாநிலம் அமிர்தசரசில் உள்ள இந்து கல்லூரியில் முன்னாள் மாணவர் சங்கம் சார்பில் கல்லூரி வளாகத்தில் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் டாக்டர் மன்மோகன் சிங்கிற்கு அஞ்சலி செலுத்தினர். கல்லூரியில் டாக்டர் மன்மோகன் சிங்கிற்கு நினைவு சின்னம் அமைக்கப்படும் என கல்லூரி முதல்வர் அறிவித்தார். டாக்டர் மன்மோகன் சிங் இக்கல்லூரியில் 1951 ஆம் ஆண்டு முதல் 1953 ஆம் ஆண்டு வரை பொருளாதாரம் படித்தவர் என்பது குறிப்பிடத் தக்கது.

புதுச்சேரியில், டாக்டர் மன்மோகன் சிங் மறைவை ஒட்டி, கடற்கரை சாலையில் அமைந்துள்ள நகராட்சி அலுவலக கட்டிடத்தில் அவரது திருஉருவ படத்திக்கு அரசு சார்பில் அஞ்சலி செலுத்தப்பட்டது.

நினைவிடம் 3 (6)

நிகழ்ச்சியில், துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன், முதலமைச்சர் திரு ரங்கசாமி, சட்டப்பேரவை தலைவர் திரு செல்வம், பொதுப்பணித்துறை அமைச்சர் திரு லட்சுமி நாராயணன், அரசு கொறடா திரு ஆறுமுகம், சட்டமன்ற உறுப்பினர் திரு லட்சுமிகாந்தன், அரசு செயலர் திரு கேசவன், செய்தி மற்றும் விளம்பரத்துறை இயக்குநர் திரு தமிழ்செல்வன் உள்ளிட்டோர் மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.

மன் கீ பாத் (9)

பிரதமர் திரு நரேந்திர மோடி நாட்டு மக்களுடன் தமது எண்ணங்களை பகிர்ந்து கொள்ளும் மன் கீ பாத் எனும் மனதின் குரல் நிகழ்ச்சி நாளை காலை 11 மணிக்கு அகில இந்திய வானொலியின் அனைத்து அலைவரிசைகளிலும் ஒலிபரப்பாக உள்ளது. ஒவ்வொரு மாதமும் கடைசி ஞாயிற்றுக்கிழமை அன்று பிரதமர் நாட்டு மக்களுடனும், வெளிநாடுகளில் வாழும் மக்களுடனும் கலந்துரையாடும் நிகழ்ச்சி ஒலிபரப்பாகி வருகிறது. இதன்படி, இந்த நிகழ்ச்சியின் 117 ஆவது அத்தியாயம் நாளை காலை ஒலிபரப்பாகிறது. பிரதமரின் இந்த நிகழ்ச்சியை தொடர்ந்து இதன் தமிழாக்கம் ஒலிபரப்பாக உள்ளது.

ஜெய்சங்கர் (11)

அமெரிக்கா சென்றுள்ள மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் நேற்று அந்நாட்டு தேசிய பாதுகாப்பு ஆலோசகரை சந்தித்து முக்கிய பேச்சுவார்த்தை நடத்தினார். 6 நாள் அரசு முறை பயணமாக அமெரிக்கா சென்றுள்ள டாக்டர் ஜெய்சங்கர், அமெரிக்க செயலாளர் திரு ஆண்டனி பிளிங்கனை சந்தித்து பேசினார். வாஷிங்டன்னில் நடைபெற்ற இந்த சந்திப்பிற்கு பிறகு திரு ஜெங்சங்கர் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில், இந்தியா-அமெரிக்கா இடையேயான நட்புறவை மேம்படுத்துவதற்கான அம்சங்கள் குறித்து ஆய்வு

மேற்கொண்டதாக தெரிவித்துள்ளார். இரு நாடுகளும் பரஸ்பர நட்புறவு, இரு நாடுகளுக்கு மட்டுமே நன்மை பயப்பதோடு மட்டுமல்லாமல் உலக நாடுகளின் நலனில் அக்கறை கொண்டு அமையும் என்றும் அவர் தெரிவித்தார்.

*__நமச்சிவாயம்__* __(18)__

புதுச்சேரியில் புத்தாண்டு மற்றும் தலைகவசம் தொடர்பான ஆலோசனை கூட்டம் மாநில உள்துறை அமைச்சர் திரு நமச்சிவாயம் தலைமையில் நேற்று நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், புதுச்சேரியில் வருகிற புத்தாண்டை பாதுகாப்பாக கொண்டாடும் வகையில், 2 ஆயிரம் போலிசார் மற்றும் 500 தன்னார்வலர்களை பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்துவது குறித்து ஆலோசிக்கப்பட்டதாக தெரிவித்தார். கடந்த ஆண்டை விட இந்தாண்டு கூடுதலாக ஒன்னரை லட்சத்திற்கும் மேற்பட்ட சுற்றுலா பயணிகள் புதுச்சேரிக்கு வருவார்கள் என எதிர் பார்க்கப்படுவதாக அவர் தெரிவித்தார். மேலும் புதுச்சேரியில் 10 க்கும் மேற்பட்ட இடங்களில் இருசக்கர வாகனங்கள் நிறுத்த பார்க்கிங் வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார். புத்தாண்டு கொண்டாட்டங்களை நள்ளிரவு 12.30 மணிக்குள் முடித்துக் கொள்ள வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். வரும் ஜனவரி மாதம் 12 ஆம் தேதி முதல் வாகன ஓட்டிகள் கட்டாயம் தலைகவசம் அணிய வேண்டும் என்றும், மீறினால், கட்டாயம் அபராதம் விதிக்கப்படும் என்றும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார். கூட்டத்தில் காவல்துறை தலைவர் ஷாலினி சிங், உள்ளிட்ட காவல்துறை உயரதிகாரிகள் பங்கேற்றனர்.

நிலக்கரி உற்பத்தி (9)

நடப்பு நிதியாண்டில் இந்தியா அதிக நிலக்கரி உற்பத்தியை கண்டுள்ளதாக மத்திய சுரங்க அமைச்சகம் தெரிவித்துள்ளது. இது கடந்த ஆண்டு 997.82 மில்லியன் டன்னாக இருந்தது என்றும், இதற்கு முந்தைய ஆண்டில் 893.19 மில்லியன் டன்னாக இருந்தது என்றும் தெரிவித்துள்ளது. இது தொடர்பாக மத்திய நிலக்கரி அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், இந்தியாவில் கடந்த 15 ஆம் தேதி நிலவரப்படி, 963.11 மெட்ரிக் டன் நிலக்கரி உற்பத்தி செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளது. ஆத்ம நிர்பர் பாரத் திட்டத்தின் கீழ், நிலக்கரி உற்பத்தி அடுத்த 5 ஆண்டுகளில் மேலும் உயரும் என எதிர்பார்க்கப் படுவதாக அமைச்சகம் தெரிவித்துள்ளது.

பெட்ரோல் டீசல் (9)

புதுச்சேரி அரசு மாநிலத்தின் வருவாயை பெருக்கும் நோக்கில், அண்டை மாநிலங்களில் நிலவும் பெட்ரோல் டீசல் விலை வேறுபாட்டை குறைக்க நேற்று வெளியிடப்பட்ட அரசாணை எண் 15 இன் படி, மதிப்பு கூட்டப்பட்ட வரி சட்டம் 2007 ன் படி, பெட்ரோல் மற்றும் டீசலுக்கான விலை, வரும் ஜனவரி 1 ஆம் தேதி முதல் 2 ரூபாய் உயர்த்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த பெட்ரோல் டீசல் மீதான வாட் வரியை உயர்த்த துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் ஒப்புதல் அளித்துள்ளார். இந்த விலை உயர்வு புதுச்சேரியின் அனைத்து பிராந்தியங்களிலும் அமல்படுத்தப்படுகிறது.

*<u>ராணுவப் பயிற்சி</u>* <u>(6)</u>

**இந்திய-நேபாள ராணுவத்தின் 18 ஆவது கூட்டு ராணுவப் பயிற்சி வரும் 31 ஆம் தேதி முதல் அடுத்த மாதம் 13 ஆம் தேதி வரை நேபாளத்தில் நடைபெற உள்ளது. காடுகளில் போர் பயிற்சி, தீவிரவாத எதிர்ப்பு நடவடிக்கைகள், பேரிடர் காலங்களில் மனிதாபிமான உதவிகளை மேற்கொள்ளுதல் போன்றவற்றை நோக்கமாக கொண்டு இந்த பயிற்சி மேற்கொள்ளப்படுவதாக பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.**